மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 29 | வெள்ளிக்கிழமை | 15.11.2024 | கதிர் 418







# தேசிய மக்கள் சக்திக்கு வரலாற்றுப் பெருவெற்றி!



கொழும்பு, நவ.15

இலங்கையின் பத்தாவது நடாளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவின் தேசிய மக்கள் சக்தி வரலாறு காணாத அறுதிப்பெரு வெற்றி பெற்றிருக்கிறது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையின் கீழ் இலங்கை வரலாற்றில் மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட ஆசனங்களைக் கைப்பற்றிய ஒரேயொரு கட்சி என்ற வரலாற்றுப் பெருமையைத் தேசிய மக்கள் சக்தி பெற்றிருக்கிறது.

பத்தாவது நாடாளுமன்றத்துக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு நேற்று வியாழக் கிழமை காலை 7.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை நடைபெற்றது. இம்முறை 1 கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 352 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். 22 தேர்தல் மாவட்டங்களில் இருந்து 196 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுடன் கட்சிகள் பெற்ற வாக்கு வீதத்தின் அடிப்படையில் 29 பேர் தேசியப்பட்டியல் மூலமாக நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

2➤

## வாக்குகளும், ஆசனங்களும் ஒரே பார்வையில்

கொழும்பு, நவ. 15

நடைபெற்றுமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் இறுதித் தேர்தல் முடிவுகளின் படி, கட்சிகள் பெற்ற வாக்குகளும், அவற்றுக்கான ஆசனங்களும் பின் வருமாறு:

- **தேசிய மக்கள் சக்தி** – 6,863,186 வாக்குகள் - 159 ஆசனங்கள்
- **ஐக்கிய மக்கள் சக்தி** – 1,968,716 வாக்குகள் - 40 ஆசனங்கள்
- **இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி** – 257,813 வாக்குகள் - 08 ஆசனங்கள்
- **புதிய ஜனநாயக முன்னணி** – 500,835 வாக்குகள் - 05 ஆசனங்கள்
- **ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன** – 350,429 வாக்குகள் - 03 ஆசனங்கள்
- **ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்** – 87,038 வாக்குகள் - 03 ஆசனங்கள்
- **சர்வஜன அதிகாரம்** – 178,006 வாக்குகள் - 01 ஆசனம்
- **ஐக்கிய தேசிய கட்சி** – 66,234 வாக்குகள் - - 01 ஆசனம்
- **ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி** – 65,382 வாக்குகள் - 01 ஆசனம்
- **அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்** – 39,894 வாக்குகள் - 01 ஆசனம்
- **அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்** – 33,911 வாக்குகள் - 01 ஆசனம்
- **சுயேட்சைக்குழு 17** – 27,855 வாக்குகள் - 01 ஆசனம்
- **ஸ்ரீ லங்கா தொழிலாளர் கட்சி** – 17,710 வாக்குகள் - 01 ஆசனம்

## யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள்

### தேசிய மக்கள் சக்தி



கருணநாதன் இளங்குமரன்
32,102



சண்முகநாதன் ஸ்ரீ பவானந்தராஜா
20,430



ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன்
17,579

### இலங்கை தமிழரசு கட்சி



சிவஞானம் ஸ்ரீதரன்
32,833

### அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்



கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
15,135

### சுயேட்சைக் குழு 17



இராமநாதன் அர்ஜுனா
20, 487

## நிராகரிக்கப்பட்ட வாக்குகள் 667,240!

கொழும்பு, நவ 15

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது 6 இலட்சத்து 67 ஆயிரத்து 240 வாக்குகள் நிராகிரிக்கப்பட்டவை என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இன்று மாலை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களின் அடிப்படையில், வாக்களிக்கத் தகுதி பெற்ற ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 352 பேரில் 68.93 வீதமான ஒரு கோடியே 18 இலட்சத்து 15 ஆயிரத்து 246 பேரே தமது வாக்குகளைச் செலுத்தியுள்ளதாகவும், அவற்றில் 5.65 வீதமான வாக்குகள் நிராகரிக்கப்பட்டன என்றும் அந்தப் புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மட்டக்களப்பில் சாணக்கியன் முன்னிலை!



மட்டக்களப்பு, நவ. 15

மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட இராசமாணிக்கம் சாணக்கியன் 65 ஆயிரத்துது 458 விருப்பு வாக்குகளைப் பெற்று முன்னிலை பெற்றிருக்கிறார்.

நடைபெற்று முடிந்த பத்தாவது நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 96 ஆயிரத்துத் 975 வாக்குகளைப் பெற்று 3 ஆசனங்களைக் கைப்பற்றியிருக்கிறது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட இ.சாணக்கியன் 65 ஆயிரத்துது 458 வாக்குகளுடனும், ஜி.சிறிநேசன் 22 ஆயிரத்து 773 வாக்குகளுடனும், எஸ். ஸ்ரீநாத் 21 ஆயிரத்து 202 வாக்குகளுடனும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

55 ஆயிரத்து 498 வாக்குகளைப் பெற்ற தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட அதன் வேட்பாளர் கே.பிரபு 14 ஆயிரத்து 856 வாக்குகளையும்,

40 ஆயிரத்து 139 வாக்குகளைப் பெற்ற ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் ஏ.எம். ஹிஸ்புல்லா 32 ஆயிரத்து 410 வாக்குகளையும் பெற்று தலா ஒவ்வொரு ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளனர். (ஐ)

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## தேசிய மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகளின்படி, தேசிய மக்கள் சக்தி 141 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி 35 ஆசனங்களையும், இலங்கைத் தமிழரசுக் கட்சி 07 ஆசனங்களையும், புதிய ஜனநாயக முன்னணி 03 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 02 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 02 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி ஒரு ஆசனத்தையும், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஒரு ஆசனத்தையும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஒரு ஆசனத்தையும், சுயேட்சைக் குழு 17 மற்றும் ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி ஆகியன தலா ஒவ்வொரு ஆசனங்களையும் கைப்பற்றியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தவிர,தேசிய மக்கள் சக்தி 18 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி 05 ஆசனங்களையும், இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒரு ஆசனத்தையும், புதிய ஜன நாயக முன்னணி 02 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒரு ஆசனத்தையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு ஆசனத்தையும் தேசியப் பட்டியல் ஊடாகப் பெற்றிருக்கின்றன. (ஐ)

# திருமலையில் குகதாசன் தெரிவு!

திருகோணமலை, நவ. 15

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாஸன் 18 ஆயிரத்து 470 வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்தில் தமிழர்பிரதிநிதித்துவத்தைத்தக்க வைத்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தின் விருப்பு வாக்குகளின் அடிப்படையில், தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட அருண் ஹெட்டியாராச்சி 38 ஆயிரத்து 368 வாக்குகளைப் பெற்று அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றவராகத் தன்னைப் பதிவு செய்துள்ளார். இவருடன், தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் ரொஷான் அக்மீமனவும் 25 ஆயிரத்து 814 வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்குகுத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இது தவிர ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் இம்ரான் மஹ்ஷூப் 22 ஆயிரத்து 779 வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ஐ)

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# ஆதரவாளர்களுக்கு அநுர நன்றி தெரிவிப்பு

கொழும்பு, நவ.15

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை ஆணை தந்த அனைவருக்கும் தனது நன்றிகளைத் தெரிவித்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க எக்ஸ் தளத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

தேர்தல் வெற்றி குறித்துத் தனது எக்ஸ் தளத்தில் மும்மொழியிலும் பதிவிட்டிருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க "மறுமலர்ச்சி யுகத்தை ஆரம்பிக்க தோள் கொடுத்த அனைவருக்கும் நன்றி" என்று குறிப்பிட்டிருக்கிறார். (ஐ)



# இலங்கை வரலாற்றில் பாரிய மாற்றம் அநுரவுக்கு வரலாறு காணாத வெற்றி



கொழும்பு, நவ 15

இலங்கை அரசியல் வரலாற்றில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கட்சி பாரிய வெற்றியை பதிவு செய்துள்ளது.

நாடாளுமன்ற தேர்தலில் தனிக்கட்சியான 2ஃ3 என்ற பெரும்பான்மையை தேசிய மக்கள் சக்தி பெற்றுள்ளது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் ஒரு தனிக் கட்சி இதைப் பெறுவது இதுவே முதல் முறையாகும்.

இந்த வெற்றியின் மூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கும் எந்தவொரு பிரேரணை மற்றும் சட்டங்கள் எந்தவொரு கட்சியின் ஆதரவின்றி நிறைவேற்ற முடியும்.

இலங்கை வரலாற்றில் பாரிய மாற்றம்-அநுரவுக்கு வரலாறு காணாத வெற்றி ; யுரெசய புழளநசஅநவெ புழவ 2 3 ஆயதழசவைல ஐெ ீயசடயைஅநவெ

இலங்கை முழுவதும் நடைபெற்ற தேர்தலில் மட்டக்களப்பு தேர்தல் தொகுதியில் மட்டும் தேசிய மக்கள் சக்தி இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை வெளியான தேர்தல் முடிவுகளின்படி தேசிய மக்கள் சக்தி 141 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 35 ஆசனங்களையும், இலங்கை தமிழரசு கட்சி 7 ஆசனங்களை, புதிய ஜனநாயக முன்னணி 3 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 2 ஆசனங்களை, முஸ்லிம் காங்கிரஸ் 1 ஆசனத்தையும் பெற்றுள்ளது. (ஐ)

# தமிழ் அரசியல்வாதிகளுக்கு அதிர்ச்சி கொடுத்த அர்ச்சுனா

கொழும்பு, நவ 15

இலங்கையில் ஏற்பட்ட அநுர அலை தென்னிலங்கை அரசியல் மட்டுமன்றி, தமிழர் தேசிய கட்டமைப்பை தகர்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது வெளியாகிக் கொண்டிருக்கும் நாடாளுமன்ற தேர்தல் பெறுபேறுகளுக்கு அமைய, வட மாகாணத்தில் தேசிய மக்கள் சக்தி ஆதிக்கம் செலுத்தியுள்ளது.

தமிழர் தாயகத்தில் பாரம்பரிய தமிழ் கட்சி பிளவுபட்டு பல பிரிவுகளாக களமிறங்கிய பெரும் தோல்வியை சந்திதுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாறாக கடந்த சில மாதங்களாக பெரும் பேசுபொருளாக இருந்த வைத்தியர் அர்ச்சுனா ராமநாதன் மீதான மக்களின் ஆதரவு தமிழ் கட்சிகளுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அநுர அலையில் தமிழ் அரசியல்வாதிகளுக்கு அதிர்ச்சி கொடுத்த அர்ச்சுனா ;ீயசடயைஅநவெ நுடநஉவழைெ 2024 னுச சுயஅயயெவாயெ யுசஉாஉாரயெ

குறுகிய காலத்தில் பிரபலமான வைத்தியர், நாடாளுமன்றம் செல்வதற்கான வாய்ப்புகள் தற்போது ஏற்பட்டுள்ளதாக தேர்தல் முடிவுகள் மூலம் அறிய முடிகிறது.எனினும் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.

இதுவரை வெளியான யாழ்மாவட்ட தேர்தல் முடிவுகளுக்கு அமைய தேசிய மக்கள் சக்தி 59688 வாக்குகளையும் இலங்கை தமிழரசு கட்சி 53250 வாக்குகளையும், சுயேட்சையாக போட்டியிட்ட வைத்தியர் அர்ச்சுனா ராமநாதன் 21433 வாக்குகளை பெற்றுள்ளார். (ஐ)

# வவுனியாவில் தமிழரசுக் கட்சி படுதோல்வி

கொழும்பு, நவ 15

நடந்து முடிந்துள்ள நாடாளுமன்ற தேர்தலின் வன்னி மாவட்டத்தின் மன்னார் தேர்தல் தொகுதிக்கான தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி 15,007வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி 8684 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தி 7948 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

தமிழரசுக் கட்சி 7490 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இலங்கை தொழிலாளர் கட்சி 6044 வாக்குகளைப் பெற்றுள்ளனர்.

நடந்து முடிந்துள்ள நாடாளுமன்ற தேர்தலின் வன்னி மாவட்டத்தின் வவுனியா தேர்தல் தொகுதிக்கான தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன.

தேசிய மக்கள் சக்தி 19,786 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி 10,736 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இலங்கை தொழிலாளர் கட்சி 8354 வாக்குகளைப் பெற்றுள்ளனர்.

ஜனநாயக தேசியக் கூட்டணி 6556 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி 5886 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இலங்கை தமிழரசுக் கட்சி 5575 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

நடந்து முடிந்துள்ள நாடாளுமன்ற தேர்தலின் வன்னி மாவட்டத்தின் முல்லைத்தீவு தேர்தல் தொகுதிக்கான தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதன்படி, இலங்கை தமிழரசுக் கட்சி, 14,297 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தி கட்சியினர் 7,789 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி 5,133 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினர் 4,664 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 2,274 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

நடந்து முடிந்துள்ள நாடாளுமன்ற தேர்தலின் வன்னி மாவட்டத்தின் தபால் மூல வாக்குகளுக்கான தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதன்படி, தேசிய மக்கள் சக்தி கட்சியினர் 4,371 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இலங்கை தமிழரசுக் கட்சி, 2,349 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினர் 1,825 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி 1,399 வாக்குகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.(5)



# ஆரவாரம்




மனிதர்களின் மனம் விசித்திரமானதுதான். ஒரு சில நேரங்களில் அவன் தனிமையை நாடுகிறான், ஒரு சில நேரங்களில் கூட்டத்தாரோடு இருப்பதற்கு விரும்புகிறான்.

பாலூட்டி வகையை சார்ந்தவன் மனிதன் என்பதில் சந்தேகமில்லை, என்றாலும் விலங்குகளில் இருந்து மாறுபட்டு இருப்பதன் காரணம் அவனது சிந்தனை அறிவுதான். இந்த அறிவு அவனுக்கு சில உணர்வுகளை ஏற்படுத்தி பொது வெளியில் எப்படி வாழ வேண்டும் என்னும் செய்கையினை கற்று தருகிறது.

இத்தகைய உணர்வுகளல் ஆண், பெண் இருபாலருக்கும் முக்கிய தேவையாக, தங்களுடைய உடம்பை மறைக்க உடைகளை அணிய ஆரம்பிக்கிறார்கள். இதிய தொடர்ந்து அவர்களது சிந்தனை வாழ்க்கையை இப்படியாகத்தான் வாழவேண்டும் என்று படிப்படியாக மாற்றி அமைத்து கொள்கிறது.

இந்த மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கு ஒரு சில ‘தேவைகள்’ தேவைப்படுகிறது, அது ‘பொருளாகவோ’ ‘செல்வங்களாகவோ’ இருக்கலாம். அதனை சம்பாதிக்க முயற்சி செய்கிறார்கள்.



அவர்கள் அப்படி சம்பாதிக்கும் பொருள், செல்வம் இவற்றை கொண்டு வாழ்க்கை முறைகளை மாற்றிக்கொண்டு வாழ முற்படுகிறார்கள். அதனால் தான் அவர்கள் ஈட்டி இருக்கும் செல்வம் பொருள், இவைகளை கொண்டு தான் அந்தந்த மனிதர்களின் வாழ்க்கை முறைகள் அமைந்து கொள்கின்றன. இதனால்தான் ஒவ்வொரு மனிதர்களின் வாழ்க்கை முறைகள் ஏற்றத்தாழ்வாகவும், வித்தியாசமாகவும் அமைந்து விடுகிறது. உடைகளின் காணப்படும் வித்தியாசங்கள் கூட இதற்கு விதி விலக்கல்ல.

இதனை ஒட்டித்தான் அவர்கள் வசிக்கும் வீடு, பயணம், இப்படி எல்லாமே அந்த செல்வத்தை அடிப்படையாக கொண்டே அமைகிறது. இதனை உள்ளடக்கியே மனிதர்களின் ‘ஆரவாரம்’ என்பது எதனை குறிப்பிடுகிறது.

‘ஆரவாரம்’ என்பது தைரியத்தையும் சத்தத்தையும் உள்ளடக்கியது என்று ஒரு பொருள் இருக்கிறது.

ஆரவாரம்-பேரொலி- **Loud noise-souting-roaring**

ஆடம்பரம்- **Show-pomposity**

துக்கம்- **distress- griefy**

என்றும் பொருள் கொள்ளலாம் என்று “தமிழ் அகராதி” சொல்கிறது இயற்கையிலேயே மனிதன் ‘ஆரவாரத்தை’ விரும்புகிறவனா?

நாம் ‘ஆரவாரம்’ என்பதை உற்சாகம், கூக்குரல், பேரோசை என்று எடுத்து கொண்டால் மனிதர்களின் மனம் இந்த செயல்களை அதிகபட்சமாக ஈடுபடுத்தி கொள்கிறது என்று எடுத்து கொள்ளலாம்.

கொஞ்சம் யோசித்து பார்த்தால் இது வித்தியாசப்படுகிறதல்லவா? தனி மனிதனாக இருக்கும்போது அவர்கள் மனம் அமைதியாக இருப்பது போல தோன்றுகிறது, அதே நேரத்தில் அவர்களை ‘ஒத்த ஒரு கூட்டம்’ அது ஆண்களாகவோ, பெண்களாகவோ இருந்து விட்டால் அதே மனிதர்களின் மனம் வித்தியாசப்பட ஆரம்பிக்கிறது. கூட்டத்தோடு கூக்குரலிடுதல், அர்த்தமற்ற சத்தம் எழுப்புதல், மகிழ்ச்சி கூக்குரல், இத்தனையும் கொண்ட மனிதர்களாக மாறி விடுகிறார்கள். அதுவும் அவர்களுக்கு பிடித்தவர்களாகவோ, ஒத்தவர்களாகவோ இருந்து விட்டால் அவ்வளவுதான், அவர்கள் போடும் ‘கோசம்’, ‘ஆட்டம்’ எல்லாம் சொல்லி மாளமுடியாது.

இதை நேரடி அனுபவமாக நம்மால் காணமுடியும். திரைப்படங்களோ, அல்லது மேடை கச்சேரி போன்றவைகளுக்கு செல்லும்போது உங்களுக்கு அறிந்த அல்லது மிகவும் பிடித்த ஒருவர் அல்லது ஒருவள், அங்குள்ள கூட்டத்தோடு கலந்து விட்டால் அவ்வளவுதான் அதுவரை அவர்களிடம் இருந்த கட்டுப்பாடுகள் காணாமல் போய் விடுகிறது. கூச்சலும், கூக்குரலும், ஆட்டமும் பாட்டமும் தானாக வந்து விடுகிறது. இது மனிதர்களுக்குள் உள்ள உள்ளங் கிடங்கை மட்டும் குறிப்பிடுகிறது. அதற்கு பின் அவர்கள் செல்லும் திரைப்படமோ மற்றைய நிகழ்ச்சிகளோ அவர்களுக்கு பிடித்தமானவைகளாக இருந்து விட்டால் இன்னும் இவர்களின் செயல்பாடுகள் அதிகமாகும்.

இதே செயல்பாடுகள் தான் ‘வன்முறை’ செயல்களிலும் ஈடுபட செய்து விடுகிறது. இது மனித ‘உளவியலின்’ தடுமாற்றம் எனலாமா? இந்த மனிதர்களின் உள்ளத்தில் ஏற்படும் தடுமாற்றத்தை நன்கு பயன்படுத்தி கொள்ளும் சிலர் அத்தகைய உணர்வுகளை மனிதர்களின் சிந்தனையில் எழ விட்டு, தூண்டியும் விட்டு அவர்களை திசை திருப்பி விடுகின்றனர். இத்தகைய வன்முறை போக்கு மனிதனின் ஆழ்மனதில் எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கிறது. அது தகுந்த சமயத்தில் இப்படி கூட்டமாய் மனிதர்கள் சேரும் இடங்களில் வெளிப்பட்டு விடுகிறது.

இத்தகைய போக்கு விலங்குகளிடம் இருப்பதாக தெரியவில்லை, என்றாலும் நாம் அன்றாடம் சந்திக்கும் தெரு நாய்களோ அல்லது வீட்டு நாய்களோ கூட்டமாக சேரும் நேரங்களில் அந்த பகுதியில் நடமாடுபவர்களை கடித்து குதறி விடுவதையும் அதனால் மக்கள் துன்பபடுவதையும் காணத்தான் செய்கிறோம்.

அதே நேரத்தில் வலிமையான சில விலங்குகள் கூட்டமாய் இருக்கும் போது அமைதியையும் கடை பிடிக்கின்றன. யானை கூட்டங்களை இதற்கு உதாரணமாக சொல்லலாம். ஆனால் அங்கும் சிக்கல் இருக்கிறது அவைகள் மிரண்டு விட்டாலோ, நுட்பமான காரணங்களால் பாதிக்கபட்டாலோ அவ்வளவுதான் தங்களது இயற்கையான வன்முறை குணங்களை காட்ட ஆரம்பித்து விடுகின்றன. மனிதனின் குணாங்களுக்கும், இதற்கும் வேறுபாடு ஒன்றுமில்லை.

அப்படி கூட்டமாக சேரும்போதும், பிறரின் தூண்டுதல்கள் ஏற்படுத்தப்படும் போதும், தடுமாற்றமில்லாமல் நிதானத்தை கடைபிடிப்பவர்களாக இருப்பவர்கள், தங்களது தனிப்பட்ட பயிற்சியினாலும், வழிமுறை,வளர்ப்பு தோன்றல்களினாலும், அறிவு சார் விசயங்களில் தெளிவுடைபவர்களாக இருப்பதாலும், இவர்களால் நிதானத்தை கடை பிடிக்க முடிகிறது.

பொதுவாக ‘உள்ளம்’ கொந்தளிக்கும் போதும், கொந்தளிக்க வைக்கப்படும்போதும், அல்லது ‘பசியின்’ உச்சத்தில் இருக்கும்போதும், ‘காம வெறியில்’ இருக்கும்போது மனிதர்களின் செயல்பாடுகள் மிருகங்களின் செயல்பாடுகளோடு ஒத்ததாக மாறிவிடுகின்றன.

அடுத்து ‘ஆரவாரம்’ என்னும் சொல்லுக்கு ‘படோபடம்’ என்றும் சொல்லலாம், இவைகள் மனிதனின் பொருளாதார இருப்பை கொண்டும் அவன் அதை கொண்டு அதீத செலவுகளை தீர்மானிப்பதை கொண்டும் அளவிடலாம்.

தகுதிக்கு மீறி செலவுகள், வசதிகளை ஏற்படுத்தி கொள்பவனை ‘ஆரவாரமாய்’ இருப்பவன் என்று குறிப்பிடலாம். வசதிகளின் மேம்பாடு, தன்னை சுற்றி பெரும் கூட்டத்தை ஏற்படுத்தி அவர்களுக்கு செலவிடுதல், இப்படிப்பட்ட செயல்பாடுகளை “ஆரவாரம்” என்று சொல்லலாம். ‘பகட்டு’ என்றும் குறிப்பிடலாம்.

அடுத்ததாக இதற்கு ‘துயரம்’ என்னும் பொருளும் படுவதாக தமிழ் அகராதி குறிப்பிடுகிறது.

‘துயரம்’ என்பது ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கிறது. அதனை வெளிப்படுத்த பல்வேறு வகைகளில் வெளிப்படுத்த முயற்சி செய்கிறார்கள். முதற்கட்டமாக அவர்களது உணர்வுகள் அவர்களின் கட்டுப்பாடுகளை மீறி கண்களில் கண்ணீரை வரவழைக்கிறது. இது ‘துயரத்தின் உச்சபட்சம்’ என்று குறிப்பிடலாம். ‘வாய் விட்டு’ கதறுவதும் துயரத்தின் உச்சபட்சங்கள்தான்.

இந்த ‘துக்கம்’ ‘துயரம்’ மனதுக்குள் அடக்கி வைத்து கொள்ளும் மணிதர்களும் உண்டு என்றாலும் நம் மனிதர்களுக்குள் இருக்கும் ‘நுண்ணிய உணர்வு இழைகள்’ அந்த துயரத்தை ‘முகத்தில்’ வெளிக்காட்டும்படி செய்து விடுகிறது. இதனால் அவர்கள் ஏதோ ஒரு துயரத்தில் இருக்கிறார்கள் என்று மற்றவர்களால் அறிந்து கொள்ள முடிகிறது.

எந்த வித துயரங்கள் வந்தாலும் அதனை வெளிகாட்டாமல் உள்ளுக்குள்ளே வைத்து புன்னகை முகத்துடனும் இருப்பவர்கள் உண்டு. அவர்கள் மேற்சொன்ன ‘கட்டுப்பாடான மனநிலை’ அல்லது ‘பற்றற்ற மனநிலை’ அதாவது எல்லாம் ‘மாயை’ என்னும் எண்ணம் கொண்டவர்கள். முடிவாக மனித வாழ்க்கை என்பது மற்ற மிருகங்களின் வாழ்க்கையை விட மேம்பட்டது என்பது எவ்வளவு உண்மையோ அது போல மற்ற எல்லா விலங்குகளுக்கும் மனிதனை போலவே இன்பம்,துன்பம்,வலி, எல்லாமே உண்டு, என்றாலும் மனிதனை போல அதற்கு வடிகாலாக ஒன்றை தேடி அதை நிவர்த்தி செய்து கொள்ளும் அறிவு அதனிடம் இல்லாததால் மனிதனை விட ஒரு படி குறைந்திருக்கிறது அவ்வளவுதான். மனிதன் எப்பொழுதும் அதை உணர்ந்திருந்தாலும் அதை சரி வர கட்டுப்பாடாய் வைக்காமல் அவனது இயல்பான குணமான இந்த “ஆரவாரம்” வெளிப்படும் போது அது சமூகத்தில் பல இன்னலகளை ஏற்படுத்தி விடுகிறது. அதிகமான வன்முறை, அதிகமான படோபடம் அல்லது பகட்டு, அதிகமாக துயரம் இவை எல்லாமே மனிதனின் வாழ்க்கைக்கு வேகத்தடைகள் தானே..! ஆனாலும் இவைகள் இல்லாமல் மனித வாழ்க்கை என்பது இல்லை என்பதும் நிதர்சனமான உண்மை.

# முஸ்லிம் காங்கிரசின் கோட்டை தேசிய மக்கள் சக்தி வசம்




கொழும்பு, நவ 15

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பாரம்பரிய அரசியல் கோட்டையாக கருதப்பட்டு வந்த கல்முனை தேர்தல் தொகுதி இம்முறை தேசிய மக்கள் சக்தியிடம் பறிபோயுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் கடந்த 1994ம் ஆண்டு தொடக்கம் கல்முனைத் தொகுதி , அக்கட்சியின் அசைக்க முடியாத கோட்டையாக இருந்து வந்துள்ளது.

கடந்த காலங்களில் மஹிந்த தரப்பின் கடுமையான நெருக்கடிகளுக்கு மத்தியில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கட்சியில் இருந்த காலங்களில்கூட கல்முனை தொகுதியை தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டிருந்தது.

எனினும் இம்முறை நடைபெற்ற பொதுத் தேர்தலில் கல்முனைத் தேர்தல் தொகுதியில் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளுடன் தேசிய மக்கள் சக்தி முதலிடம் பெற்றுள்ளது

அங்கு தொடர்ச்சியாக வெற்றிக்கொடி நாட்டி வந்த சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வெறும் ஒன்பதினாயிரம் வாக்குகளை மட்டுமே வெற்றி பெற்றுள்ளது (ஐ)

# போதையில் தள்ளாட்டம் பொலிஸார் இருவர் கைது

கொழும்பு, நவ 15

வாக்களிப்பு நிலையத்தில் போதையில் தள்ளாடிய இரண்டு பொலிஸார் மாத்தறையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.,

மாத்தறை, கிரிந்த ஜயவிக்ரம கனிஷ்ட கல்லூரி வாக்களிப்பு நிலையத்தில் கடமையாற்றிய இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களே போதையில் இருந்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொனராகலை பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும், கிரிந்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் பயிலுனர் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இரண்டு பொலிஸாரும் நேற்றைய தினம் வாக்குச்சாவடியில் மதுபோதையில் தள்ளாடியதாக பொதுமக்கள் அளித்த தகவலின் பிரகாரம், திஸ்ஸமஹாராம உதவி பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரையின் பேரில் திஸ்ஸமஹாராம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

# கடந்த பொதுத் தேர்தலில் சாதனை படைத்த ராஜபக்ச குடும்ப உறுப்பினருக்கு அதிர்ச்சி



கொழும்பு, நவ 15

நடைபெற்றுமுடிந்த பொதுத்தேர்தல்கள் முடிவுகள் தற்போது வெளியாகிக் கொண்டிருக்கும்நிலையில், தேசிய மக்கள் சக்தி முன்னணி வகிக்கிறது.

இந்நிலையில் பொதுத் தேர்தலில் போட்டியிட்ட ராஜபக்ச குடும்ப உறவினரான நிபுனரணவக்கபடுதோல்வியடைந்துள்ளார்.

2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் மாத்தறையில் அதிக வாக்குகளைப் பெற்றவராக சாதனை படைத்திருந்தார்.

எனினும் படுதோல்வியடைந்த நிபுண ரணவக்க இம்முறை ஆசனத்தைப் பெறத் தவறியுள்ளார்.

த் போது வெளியான தேர்தல் பெறுபேறுகளுக்கு அமைய, கடந்த தேர்தல் வெற்றி பெற்ற பலர் இம்முறை படுதோல்வி அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# மாத்தளையில் கோர விபத்து

கொழும்பு, நவ 15

பொலிஸாரின் தகவல்களின் பிரகாரம் இன்று மாலை 7.30 மணியளவில் இந்த விபத்து நடைபெற்றுள்ளது.

கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் உள்ள தனியார் நிறுவனமொன்றின் ஊழியர்கள் வாடகைப் பேருந்து ஒன்றில் சுற்றுலா சென்றிருந்த நிலையில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

மாத்தளை மாவட்டத்தின் வில்கமுவ பொலிஸ் பிரிவில் தம்புள்ளை – மஹியங்கனை வீதியின் எளவாகந்த பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தம்புள்ளையிலிருந்துமஹியங்கனை நோக்கி சென்று கொண்டிருந்த பேருந்து ஒன்றும் எதிர்த்திசையில் இருந்து வந்து கொண்டிருந்த வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகி இருப்பதாக தெரிய வந்துள்ளது.

விபத்தினையடுத்து பேருந்துபள்ளத்தில் கவிழ்ந்து, அதில் பயணித்த 37 பேரும், வான் வண்டியில் இருந்த 05 பேரும் காயமடைந்து வில்கமுவ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பேருந்தில் பயணித்த இருவரும், வேனில்பயணித்த ஒருவரும்விபத்தின் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

மாத்தளை, லக்கல எலவனகந்த பிரதேசத்தில் இடம்பெற்ற பேரூந்து விபத்தில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

இதன் போது பேரூந்தில் பயணித்த மேலும் 39 பேர் விபத்தின் காரணமாக காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுற்றுலா சென்று கொண்டிருந்த பேரூந்து ஒன்றும் வேன் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதன் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மாத்தளை பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

நிறுவனத்திலிருந்து நிலையான வைப்புகளிற்கு விசேட வட்டி விகிதம்.
Orient Finance
A Janashakthi Group Company
தொடர்புகளிற்கு
0770235816 / 0774747278
No:550, Hospital Road,Jaffna

# மீண்டும் தேர்தல்களில் போட்டியிடுவேன் மைத்திரி அதிரடி

கொழும்பு, நவ 15

எதிர்வரும் காலங்களில் மீண்டும் தேர்தல்களில் போட்டியிடவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இன்றைய தினம் பொதுத் தேர்தலுக்கான தனது வாக்கை, பொலன்னறுவை புதிய நகரத்தின் வித்ய ாலோக பிரிவெனவில் செலுத்தினார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர்,

இந்த அரசாங்கம் ஐந்து வருடங்கள் நிலைத்திருக்கும் என்று கூற முடியாது. இடைநடுவிலும் கவிழும் சாத்தியம் உள்ளது. அதன் காரணமாக நான் தற்போதைக்கு அரசியலில் இருந்து ஓய்வெடுத்துக் கொள்ளும் எண்ணம் இல்லை. எங்களுடைய சர்வஜன அதிகாரம் கட்சிக்கு மிகச் சிறந்த தலைவர் ஒருவர் கிடைத்துள்ளார்.

அதன் காரணமாக எதிர்வரும் காலங்களில் நான் மீண்டும் தேர்தல்களில் போட்டியிடும் சந்தர்ப்பங்கள் ஏற்படலாம் என்றும் மைத்திரிபால சிறிசேன தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (ஐ)

# இலங்கை வரலாற்றில் முதல்முறையாக நாடாளுமன்றம் செல்லும் மலையக பெண்கள்!

கொழும்பு, நவ 15

நடந்துமுடிந்த இலங்கை நாடாளுமன்ற தேர்தலில் முன்னொருபோதும் இல்லாத வகையில் ஜனாதிபதி அனுரகுமாரதிசநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி மாபெரும் வெற்றிய பதிவு செய்துள்ளது.

12 பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களில் மூவர் தமிழ் பெண்கள் அதிலும் குறிப்பாக இரண்டு மலையக பெண்களும் தெரிவாகியுள்ளனர்.

அந்தவகையில் பதுளை மாவட்டத்தில் இருந்து அம்பிகா சாமுவேல், மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் இருந்து கிருஸ்ணன் கலைச்செல்வியும் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள மலைய பெண்கள் ஆவார்கள்.

இந்நிலையில் இலங்கை வரலாற்றில் 12 பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளமை பெரும்திருப்புமுனையாக உள்ளது .

அதிலும் மலையக பெண்கள் நாடாளுமன்றம் செல்வது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)



# தேசிய பட்டியல் தொடர்பில் சுமந்திரன் வெளியிட்ட கருத்து

கொழும்பு, நவ 15

நாடாளுமன்ற தேர்தலில் தோல்வியடைந்துள்ள எம்.ஏ.சுமந்திரன் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் செல்வதற்கான வாய்ப்பில்லை இல்லை என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதன்படி, தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் செல்ல மாட்டேன் என தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் வழங்கிய செவ்வி ஒன்றின் மூலம் குறிப்பிட்டிருந்தார்.

தற்போது யாழ்-கிளிநொச்சி மாவட்ட தேர்தல் தொகுதியில் சுமந்திரன் தோல்வியடைந்துள்ளார்.

இந்தச் சூழ்நிலையில் அவர் தேசியப்பட்டில் ஊடாக நாடாளுமன்றம் செல்வதற்கான வாய்ப்பு அதிகளவில் இல்லை என தெரிவிக்கின்றது.

எனினும், மக்கள் தன்னை நிராகரித்தால் இனிவரும் காலங்களில் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் செல்லவே மாட்டேன் என்றும் சுமந்திரன் குறித்த செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், தற்போது நாடளாவிய ரீதியில் நாடாளுமன்ற தேர்தலுககான தேர்தல் முடிவுகள் வெளியாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)



# வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பின்னுக்குத் தள்ளிய தேசிய மக்கள் சக்தி

கொழும்பு, நவ 15

வடக்கு கிழக்கில் கடந்த காலங்களில் பொதுத் தேர்தல்களில் ஆதிக்கம் செலுத்திய இலங்கைத் தமிழரசுக் கட்சி இம்முறை தேசிய மக்கள் சக்தியிடம் தோல்வி கண்டுள்ளது.

இம்முறை நடைபெற்ற பொதுத்தேர்தலுக்கான தபால் மூல வாக்கு எண்ணிக்கையின் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தி கட்சியானது திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணத்தில் முதலிடம் பெற்று, இலங்கைத் தமிழரசுக் கட்சியை பின் தள்ளியுள்ளது.

திருகோணமலையில் தேசிய மக்கள் சக்தி 9705 தபால் மூல வாக்குகளைப் பெற்றுள்ள நிலையில், மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ள தமிழரசுக் கட்சி 1814 வாக்குகளையே பெற்றுள்ளது.

அதேவேளை வன்னியிலும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தபால் வாக்குகளில் மூன்றாம் இடத்தைப்பிடித்த தேசிய மக்கள் சக்தி, இம்முறை முதலாமிடம் பெற்றுக் கொண்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தி 9066 தபால் மூல வாக்குகளைப்பெற்றுக்கொண்டுள்ள நிலையில், 2582 வாக்குகளுடன் தமிழரசுக் கட்சி இரண்டாமிடத்தையே பிடித்துக்கொண்டுள்ளது.

அந்த வகையில் இம்முறை நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் வடக்கு மற்றும் கிழக்கு உள்ளிட்ட நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் தேசிய மக்கள் சக்தி பாரிய வெற்றியொன்றைப் பெறக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஐ)

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# வீட்டு சின்னத்தில் வெற்றிபெற்ற ரவிகரனுக்கு அமோக வரவேற்பு!





கொழும்பு, நவ 15

இலங்கை நாடாளுமன்ற தேர்தலில் தமிழரசுக் கட்சி வீட்டு சின்னத்தில் போட்டியிட்டு, வன்னிதேர்தல் தொகுதியில் வெற்றியீட்டிய, நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகியுள்ள துரைராசா ரவிகரனை வரவேற்கும் நிகழ்வு இன்று (15) முல்லைத்தீவு நகரில் இடம்பெற்றுள்ளது.

நேற்று இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வன்னித்தேர்தல் தொகுதியில் இலங்கை தமிழரசுக்கட்சி சார்பாக போட்டியிட்டு துரைராசா ரவிகரன் வெற்றிபெற்றுள்ளார்.

இந்நிலையில் , மக்களின் அமோக ஆதரவுடன் வெற்றிவாகை சூடிய நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனை முல்லைத்தீவு மக்கள் அனைவரும் அணிதிரண்டு வரவேற்றனர்.

இன்று காலை 10 மணியளவில் ஆரம்பமாகிய இந்த நிகழ்வில் மக்களால் வெற்றியீட்டிய வேட்பாளருக்கு மாலை அணிவித்து, வரவேற்று குறித்த வெற்றிக்கொண்டாட்டம் ஆரம்பமாகியிருந்தது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மக்கள், சமூக ஆர்வலர்கள், இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடதக்கது. (ஐ)







## கல்முனையில் அரசியல் கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் மோதல்



கொழும்பு, நவ 15

திகாமடுல்ல மாவட்டத்தின் கல்முனை பிரதேசத்தின் அல் அஸ்கர் மகா வித்தியாலயத்திற்கு அருகில் மூன்று அரசியல் குழுக்களுக்கிடையில் மோதல் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் மற்றும் சுயேட்சைக் குழு உறுப்பினர்களுக்கிடையில் இந்த மோதல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

ஏற்கனவே, கல்முனையை மோதல்கள் நிறைந்த பிரதேசமாக தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்பான கபே அறிவித்ததை அடுத்து அங்கு பொலிஸ் பாதுகாப்பையும் பலப்படுத்தியிருந்தது .(ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.11.2024 இல் வெளியிடப்பெற்றது.